# பொதுமக்களுக்கு முக்கிய அறிவிப்பு

விழுப்புரம் மாவட்டத்தில் பொய்யான பெயர் மற்றும் முகவரி தெரிவித்துக் கொண்டு, தன்னை அரசு சார்ந்த அலுவலர் என அறிமுகப்படுத்திக் கொண்டு வாகன விபத்தில் உயிர் இழந்தவர்களின் உறவினர்களை தொடர்புகொண்டு அரசு நிவாரணத் தொகை மற்றும் அனைத்து விதமான உதவித்தொகைகள் பெறுவதற்கு தான் முன்நின்று தொகை பெற்றுக் கொடுப்பதாக கூறி, பொய்யான தகவல்களை தெரிவித்து அவர்களிடமிருந்து ஒரு பெருந்தொகையை பெற்றுக் கொண்டு ஏமாற்றி வருவதாக தெரியவருகிறது.

இதன் மூலம் பொதுமக்களுக்கு தெரிவிப்பது யாதெனில் எந்த ஒரு நபரும் தங்களை அணுகி மேற்கண்ட உதவிகளை செய்து தருவதாக கூறினாலும், அது சம்மந்தமாக தொகைகள் வழங்கிட கோரினாலும் அதனை நம்பி, அந்த நபர்களிடம் தொகை கொடுத்து ஏமாற வேண்டாம் எனவும், உடனடியாக அந்த நபர்களை கிராம நிர்வாக அலுவலர்களிடமோ (அல்லது) அருகில் உள்ள காவல் நிலையத்திலோ பிடித்து ஒப்படைத்திடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மேலும், **பயனாளிகள் தங்களுக்கு தேவையான உதவிகளை தொடர்புடைய அரசு அலுவலகங்களை மட்டும் நேரில் அணுகி அரசு உதவிகளை பெற்றுக்கொள்ளுமாறும்** விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் பொதுமக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்

ஒம்/ இல.சுப்பிரமணியன்,
மாவட்ட ஆட்சியர்,
விழுப்புரம்.

/உ.ந.உப./

[signature] 23/11/16.

அலுவலக மேலாளர்(பொது)

செய்தி வெளியீடு எண் : 52

நாள் : 24/11/16.

செமசொஅ